# சௌந்தர்ய மடல்

பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்தினை
பிரதிபலிக்கும் காலாண்டு வெளியீடு [மே 2012]


## கஸ்தூரிபா நினைவு பொதுக்கூட்டம்

காந்திகிராம அறக்கட்டளையில் செயல்பட்டுவரும் பல்வேறு அலகுகளின் கிராம நல்வாழ்வுத் திட்டங்களைத் தீவிரப்படுத்தும் பொருட்டு 2012 பிப்ரவரி 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் கஸ்தூரிபா நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் முதல் நாளான 21–ஆம் தேதி மாலை 5.00 மணி அளவில் காந்திகிராமம் ஊராட்சியின் குக்கிராமமான சாமியார்பட்டியில் தம்பித்தோட்டம் மேனிலைப்பள்ளியின் மூலம் கஸ்தூரிபா நினைவுப் பொதுக்கூட்டம் அனுசரிக்கப்பட்டது.

இவ்விழாவில் காந்திகிராம ஊராட்சித் தலைவர் திரு. T. ஜெயராமன் அவர்கள் தலைமையேற்றார். திரு. S. துரைப்பாண்டி, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறைப் பேராசிரியர் முனைவர் S. ஆறுமுகம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



22–02–2012 அன்று காலை 7.30 மணி அளவில் டாக்டர் சௌந்தரம் மணி மண்டபத்தில் சர்வோதயக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. காலை 9.00மணி அளவில் பெண் பணியாளர்களின் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு கஸ்தூரிபா மருத்துவமனையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருச்சியிலிருந்து டாக்டர் S. கஸ்தூரி அவர்கள் தலைமையேற்று தலைமையுரை ஆற்றினார்கள். காந்திகிராம அறக்கட்டளையுடன் நெருங்கிய தொடர்புகொண்டு உதவி புரிந்துவரும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த திரு. ரெய்னர் யுங்ஸ்ட் மற்றும் அவரது மனைவி திருமதி அன்னா ரெய்னர் யுங்ஸ்ட் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். காந்திகிராம அறக்கட்டளையின் வாழ்நாள் பணியாளர் செல்வி K.S. நீலா அவர்கள் காந்திகிராம அறக்கட்ளையின் அனைத்து அலகுகளின் செயல்பாடுகள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்தார். கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேல்நிலைப்பள்ளியில் 10–12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேனிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி. C.ஜனகராணி நன்றி கூறினார். இதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. காந்திகிராம கானத்துடன் பொதுக்கூட்டம் நிறைவுபெற்றது.

## கிராமக் கைத்தொழில் மற்றும் கைவினைப் பொருள் கருத்தரங்கு

சென்னையில் உள்ள The Institute of Public Enterprises and Public Administration மூலம் 08–11–2012 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்




திரு. எம்.ஆர். ராஜகோபாலன் அவர்கள் கலந்துகொண்டார். இக்கருத்தரங்கில் கிராமக் கைத்தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றி விரிவுரை ஆற்றினார். கருத்தரங்கில் பேசப்பட்ட கருத்துக்கள் மிகவும் உபயோகமுள்ளதாக இருந்தது என கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்த முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கோவிந்தராஜன் அவர்கள் காந்திகிராம அறக்கட்டளைக்கு அனுப்பிய தபாலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

## சௌபாக்ய இல்லம்

சௌபாக்ய இல்லக் குழந்தைகள் தம்பித்தோட்டம் மேனிலைப்பள்ளிக்கு சாலைகளைக் கடந்து செல்லவேண்டியுள்ளது. குழந்தைகள் பயந்து கொண்டே சாலைகளைக் கடந்து செல்கின்றனர். பெங்களூரில் உள்ள திரு. ரவி நாராயணன் அவர்கள் சௌபாக்ய இல்லக் குழந்தைகள் பயமின்றி பள்ளிக்குச் சென்றுவரும் பொருட்டு ரூ. 8,15,776/– மதிப்பில் வேன் ஒன்றினை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.



டாக்டர் பங்கஜம் சுந்தரபாண்டியன் அவர்கள் தியாகி பழனிச்சாமி கட்டிடத்தை புனரமைக்கும் பணிக்காக ரூ.25,000/– நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

திருமதி கோதாவரி சுப்பிரமணியன் அவர்களின் நினைவாக ரூ. 8,10,000/– மதிப்பில் மூத்த பெண்களுக்கான விடுதி ஒன்று சௌபாக்ய இல்லத்தில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு திருமதி சுசீலா போலர் ரூ. 5,00,000/.– நன்கொடையாக அளித்துள்ளார். மேலும் 26–04–2012 அன்று அவர்கள் சௌபாக்ய இல்லத்திற்கு வருகைபுரிந்து இக்கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

திரு. சதீஸ்குார் – உலக வங்கி அவர்கள் மூலம் ரூ.33,182/– வைப்பு நிதியாக நன்கொடை பெறப்பட்டது. இந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டிப் பணத்தைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கு கூடுதல் திறமைகளை வளர்ப்பதற்கு பயன்படுத்துமாறு கேட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் வைப்பு நிதி தருவதாகவும் கூறியுள்ளார்.

Ann நிறுவன இயக்குநர் அவர்கள் குழந்தைகள் இல்லத்திற்கு வருகைபுரிந்து online மூலம் கணினி மற்றும் ஆங்கிலம் பயிலும் மாணவிகளுடன் கலந்துரையாடல் புரிந்தார்.

குழந்தைகள் இல்லத்தில் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் பொருட்டும் அவ்வப்பொழுது குழந்தைகளுக்குத் தேவையான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## ஔவை ஆசிரமம்

ஔவை ஆசிரமத்தில் நடைபெற்றுவரும் பால்வாடியில் 25 குழந்தைகள் உள்ளனர். இக்குழந்தைகள் அமர்வதற்காக RMKV நண்பர்கள் 25 பிளாஸ்டிக் நாற்காலிகள் கொடுத்து உதவியுள்ளனர். மேலும், இம்மையத்திற்கு சென்னையில் உள்ள TNU அறக்கட்டளை சீருடைகள் கொடுத்துள்ளனர். இவைகள் குழந்தைகளுக்கு மிகவும் உதவியாக உள்ளது. நன்கொடையாளர்களின் அன்பிற்கு குழந்தைகளின் நல்வாழ்த்துக்கள்.



## சாந்திப் பள்ளி

காந்திகிராம சாந்தி காதுகேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் U. இசக்கித்துரை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில அளவில் நடைபெற்ற தடகளப் போட்டியில் கலந்துகொண்டார். இதில் 14 மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் பங்கேற்றனர். இசக்கித்துரை நீளம் தாண்டுதலில் மூன்றாம் பரிசு பெற்றுள்ளார். அதனைப் பாராட்டும்விதமாக தாமிரபரணி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் அதன் இயக்குநர் திரு. ப. பழனிக்குமார் அவர்கள் முன்னிலையில் அம்பாசமுத்திரம் புனித வளனார் உயர்நிலைப் பள்ளியில் பாராட்டுவிழா நடைபெற்றது. இசக்கித்துரைக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

## டாக்டர் T.S. சௌந்தரம் வித்யாலயா மெட்ரிக் பள்ளி

சௌந்தரம் வித்யாலயாப் பள்ளியில் T. சேதுராமன் என்ற மாணவன் கல்வி பயின்று வருகின்றான். இவன் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். 15-01-2012 அன்று ஈரோட்டில் நடைபெற்ற மாநில அளவிலான ஸ்கேட்டிங் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் பெற்று சாதனை புரிந்து பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.



மேலும், பள்ளியில் நடைபெற்ற எதிர்காலத்திற்கான 'தண்ணீர் சேமிப்போம்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் T. சேதுராமன் கலந்துகொண்டு முதல் பரிசு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காந்திகிராம தொடக்கப்பள்ளி

இப்பள்ளியில் குழந்தைகளின் கல்வித்திறனை மேம்படுத்தும் பொருட்டு கல்விக்குழுக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். அதில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டு குழந்தைகளின் கல்வி முன்னேற்றம் பற்றி கலந்துரையாடினர். ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஆத்தூரில்நடைபெற்ற ஆசிரியர்களுக்கான அறிவியல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சியில் இப்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

28-02-2012 அன்று அறிவியல் தினம் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் தங்களது அறிவியல் படைப்புகளை கண்காட்சியில் வைத்து விளக்கமளித்தனர். இக்கண்காட்சியைப் பார்த்த பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. பழனிச்சாமி ஆகியோர் மாணவர்களைப் பாராட்டினர்.

## கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேனிலைப்பள்ளி

சேவிகாசிரமம் சிறப்பு மேனிலைப் பள்ளியில் மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் 14-02-2012 அன்று கல்விச் சுற்றுலா சென்று வந்தனர். திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மேல்மருவத்தூர் மற்றும் சமயபுரம் ஆகிய ஊர்களைப் பார்வையிட்டனர்.



இப்பள்ளி மாணவிகள் சுத்தமான குடிநீர் பெறுவதற்காக அம்பாத்துரை பாரத ஸ்டேட் வங்கி RO System ஒன்றை நன்கொடையாக வழங்கியுள்ளது. 2011-2012 ஆம் கல்வியாண்டில் பொதுத்தேர்வு எழுதிய 10ஆம் வகுப்பு மாணவிகள் அறிவியல் செய்முறைத் தேர்வு எழுத தேர்வுமையமாக இப்பள்ளி தேர்வு செய்யப்பட்டு அதற்கான ஆணை 16-02-2012 அன்று வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்கது. திண்டுக்கல் குயின் சிட்டி ரோட்டரி மூலமாக மாணவிகளுக்கு 20 செட் மேஜை நாற்காலி மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கப்பட்டன. திண்டுக்கல் குயின்சிட்டி ரோட்டரி பள்ளிக்கு கழிப்பறை கட்டுவதற்கு ரூ. 1.20 கோடி நன்கொடையாக வழங்கியுள்ளது. கோயமுத்தூரில் உள்ள திருமதி கலா வைத்தியநாதன் அவர்கள் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ. 1 லட்சம் நன்கொடை வழங்கி உள்ளார். சாரியார் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி ஜெயா சந்தானம் ரூ.17,000/- அலுவலகப் பணிக்காக வழங்கியுள்ளார்கள்.

## தம்பித்தோட்டம் மேனிலைப்பள்ளி கணினி ஆய்வுக்கூடக் கட்டிடத் திறப்புவிழா

தம்பித்தோட்டம் மேனிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்காக கணினி ஆய்வுக்கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் கட்டுவதற்காக திரு. A.T.A. சந்திரசேகரன் அவர்களது ரடிற வடி யீட்யல் பரவையச நினைவாக அவரது துணைவியார் திருமதி C. திலகம் மற்றும் திரு. P. வெங்கடேஷ்பாபு குடும்பத்தினரால்



வழங்கப்பட்ட ரூ. 10 இலட்சம் நன்கொடையுடனும் நிர்வாகத்தின் நிதியுதவியுடனும் இந்த ஆய்வுக்கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டிடம் 25–04–2012 அன்று அறக்கட்டளையின் வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியல் காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அலகுகளின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

---

## லெட்சுமி கல்வியியல் கல்லூரி

லெட்சுமி கல்வியியல் கல்லூரி மாணவ மாணவியர் தம்பித்தோட்டம் மேனிலைப்பள்ளியில் அனைத்து கல்வி நிறுவனங்கள் சார்பில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றனர். எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு திருநெல்வேலி திரு. நெல்சன் அவர்கள் மூலம் 21–02–2012 அன்று கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும் தூத்துக்குடி டாக்டர் விஜயரெங்கன் அவர்கள் மாணவர்களுக்கு தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் பற்றி கலந்துரையாடல் நிகழ்ச்சியை 22–02–2012 அன்று நடத்தினார்.

கோயமுத்தூர் திரு. ஜெயராஜ் அவர்கள் 01–03–2012 அன்று கல்லூரி மாணவ மாணவியருக்கு தகவல் தொடர்பு பற்றி விளக்கினார்.

டாக்டர் A. மீனாட்சிசுந்தரம் மற்றும் திருமதி P.சுசீலா ஆகிய இருவரும் சிவசைலத்தில் நடைபெற்ற பணியாளர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சிகளில் கலந்துகொண்டனர்.

காந்திகிராம அறக்கட்டளையில் நடைபெற்ற உலக மகளிர் தினவிழாவன்று நடைபெற்ற பட்டிமன்றம் நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் பங்கேற்று திறம்பட வாதாடினர்.

---

## கஸ்தூர்பா மருத்துவமனை

கஸ்தூர்பா மருத்துவமனையில் 15 படுக்கைகள் கொண்ட முதியோர்களுக்கான புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சின்னாளபட்டியில் உள்ள வில்சன் சோடா கம்பெனி குடும்பத்தினர் இதனை நன்கொடையாகக் கட்டியுள்ளனர். அதிநவீன சிறப்பு அறை கட்டுவதற்கு திருமதி சீலாபோலர் அவர்கள் ரூ. 5 லட்சம் வழங்கியுள்ளார். இக்கட்டிடம் 2012 பிப்ரவரி 6ஆம் தேதி அன்று திறந்துவைக்கப்பட்டது. செல்வி கே.என். சாருமதி மற்றும் அவர்களது உறவினர்கள் விருந்தினர் விடுதி கட்டுவதற்கு நன்கொடை வழங்கியுள்ளார்கள். மருத்துவமனை உணவகத்தில் வீணாகும் கழிவுகளைப் பயன்படுத்தி மீத்தேன் வாயுக் கலன் ஒன்று கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

---

## மகளிர் தினவிழா

காந்திகிராம அறக்கட்டளையின் கீழ் இயங்கிவரும் கிராம விரிவாக்க மையம் ஏற்பாடு செய்த மகளிர் தினவிழா மார்ச் 8–ஆம் தேதி அன்று டாக்டர் சௌந்தரம் மணிமண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். ''பெண்களும் ஆரோக்கியமும்'' என்ற தலைப்பு மையக்கருத்தாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்விழாவில் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த குறும்படம் ஒன்றும் வெளியிடப்பட்டது. மருத்துவ ஆலோசகர் Dr. ராமச்சந்திரன் அவர்கள் காசநோயும் பெண்களும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். லெட்சுமி கல்வியியல் கல்லூரி மாணவ



மாணவியர்களின் பட்டிமன்றம் பெண்கள் மேம்பாட்டிற்கு பெரிதும் உதவுவது ஆண்களே! பெண்களே! என்ற தலைப்பில் சிறப்பாக நடைபெற்றது. இப்பட்டிமன்றத்தின் மூலம் பெண்களின் சிறப்புகள் மற்றும் கல்வி பொருளாதார முன்னேற்றங்கள் பற்றி வாதிடப்பட்டது. இவ்விழாவில் காந்திகிராம அறக்கட்டளையின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொது அறக்கட்டளை

கதர் அறக்கட்டளையில் தற்சமயம் 18 வகையான கிராமக் கைத்தொழில் பொருட்கள் உற்பத்தி / விற்பனை நடைபெற்றுக்கொண்டுள்ளது. மேலும், ஒரு கிராமக் கைத்தொழில் (பேக்கரி யூனிட்) ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டு அதற்கான செயல்திட்டம் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் ஆணையத்திற்கு ரூ. 5 லட்சம் மதிப்பில் தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான முதல் தவணைத் தொகையும் பெறப்பட்டுள்ளது.

விக்கிரமசிங்கபுரத்தில் நமது நிறுவனத்திற்காக நெசவு செய்துவரும் 5 நெசவாளர்களுக்கு தனித்தனியாக தொழிற்கூடம் அமைக்க ரூ. 45,000 / வீதம் 2,25,000/– கதர் மற்றும் கிராமக்கைத்தொழில் ஆணையம் அனுமதித்துள்ளது.



மேலும், கதர் சேலைகள் உற்பத்தியில் புதிய டிசைன்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறன. கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் ஆணையம் மூலம் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கண்காட்சி மற்றும் டெல்லியில் கைவினை கவுன்சில் நடத்திய கண்காட்சியிலும் கலந்துகொண்டு புதிய டிசைன் புடவைகள் 150 விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## பொது சேவை மையம் SFURTI

காந்திகிராம அறக்கட்டளையில் லெட்சுமி சேவா சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் பாரம்பரிய தொழில்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் ஆதிலட்சுமிபுரம் கிராமத்தில் பொது சேவை மையம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் கட்டுவதற்குரிய இடத்தினை லெட்சுமி சேவா சங்கம் வழங்கியுள்ளது. மாவு அரைக்கும் மிஷின் திட்டத்தின்மூலம் இக்கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை கதர்கிராம தொழில் ஆணையத்தின் தென்மண்டல உறுப்பினர் திரு. K.C. காளப்பா அவர்கள் 25–02–2012 அன்று திறந்து வைத்தார்.

இக்கட்டிடத் திறப்புவிழாவில் அனைத்து கிராமப் பணியாளர்களும் கலந்துகொண்டனர். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் மதுரை மண்டல இணை இயக்குநர் திரு. L. மதிவாணன் அவர்கள் வரவேற்றார். காந்திகிராம அறக்கட்டளையின் வாழ்நாள் அறங்காவலர் டாக்டர் ஆர். கௌஸல்யாதேவி அவர்கள் தனது உரையில் ஸ்பூர்த்தி திட்டத்தின் மூலம் கிராம மக்களுக்கு கூடுதலான வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். தமிழ்நாடு சர்வோதய சங்க செயலாளர் திரு. K. சின்னச்சாமி அவர்கள் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியது குறித்து காந்திகிராம நிர்வாகத்திற்கு வாழ்த்துக் கூறினார்.



காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. எம்.ஆர். ராஜகோபாலன் அவர்கள் தமது தலைமையுரையில் கதர் கிராமக் கைத்தொழில் ஆணையம் இத்திட்டத்தினை நல்கியதற்காக நன்றி தெரிவித்தார். மேலும், இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தியதோடு பயனாளிகள் திறமையானவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர். அது மட்டுமல்லாது ஸ்பூர்த்தி திட்டத்தின் மூலம் பயிற்சி அளித்து உருவாக்கப்பட்ட காந்திகிராம விற்பனைப் பிரதிநிதிகள் இந்தியா முழுவதும் நடைபெறக்கூடிய அனைத்துக் கண்காட்சிகளிலும் கலந்துகொண்டு மாதம் ரூ.3000 முதல் 5000/– வரை வருமானம் பெறுகின்றனர் என்றார்.

திரு. காளப்பா அவர்கள் தமது சிறப்புரையில் தென்மண்டலத்தில், குறிப்பாக காந்திகிராம அறக்கட்டளை கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் ஆணையத்தின் அனைத்து திட்டங்களையும் வெற்றிகரமாக செயல்படுத்துவது பெருமைக்குரியது என்றார். கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் ஆணையம் அதிக அளவில் கைவினைஞர்கள் குறிப்பாக நூற்போர், நெய்வோர்களுக்குப் பணி செய்ய விரும்புகிறது. இப்பணியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்க நாம் இணைந்து செயல்பட வேண்டும் என்றார். உற்பத்தி மட்டுமல்லாது மூலிகை விற்பனையிலும் கைவினைஞர்கள் ஈடுபட வேண்டும் என்றார்.

## தரமான கல்வித் திட்டம்

சிவசைலத்தில் உள்ள களக்காடு பகுதியில் காந்திகிராம அறக்கட்டளையின்கீழ் 12 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இங்கு குழந்தைகளின் கல்வித் திறனை மேம்படுத்தும் பொருட்டு பணிகள் நடைபெறுகின்றன. இத்திட்டத்தின் நிதியுதவியாளர் திரு. S.V. ராஜன்ராகவன் அவர்கள் 21–02–2012 அன்று திட்டப் பணிகளைப் பள்ளிகளில் பார்வையிட்டார். இவருடன் திட்ட மேலாளர் திரு. A.L. ரெங்கராஜன், மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. விக்டர், காந்திகிராம அறக்கட்டளையின் மனிதவள மேம்பாட்டு இயக்குநர் டாக்டர் K. வாசுகி ஆகியோர் உடனிருந்தனர். அத்துடன் அப்பகுதியில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களிடம் கலந்துரையாடினர். அதுமட்டுமல்லாது ரூ.15000/– மதிப்பில் அறிவியல் ஆய்வகத்திற்குத் தேவையான பொருட்கள் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வழங்கப்பட்டன. அதனை அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் பெற்றுக்கொண்டார்.



## சமூக மறுவாழ்வுத் திட்டம்

திருநெல்வேலி மாவட்டம் சிவசைலத்தில் நடைபெற்று வரும் மாற்றுத் திறனாளிகளுக்கான சமூக மறுவாழ்வுத் திட்டத்தின் பயனாளிகளான மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பெற்றோர்களுக்கான கூட்டம் 03–02–2012 அன்று நடைபெற்றது. திரு. S. பாலசிங், சிறப்பு கல்வியார் அவர்கள் கலந்துகொண்டு குழந்தைகள் நலம் பற்றி எடுத்துரைத்தார். மேலும், உறுப்பினர்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றி எடுத்துரைத்தனர். மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்துதல், பெற்றோர்கள் குழந்தைகள் சென்று வருவதற்கான போக்குவரத்திற்காக ஆசிரமத்திற்கு பணம் கொடுக்க முன்வருதல் மற்றும் சீருடை போன்ற விபரங்கள் அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

## பணியாளர்களுக்குத் திறன் மேலாண்மைப் பயிற்சி

காந்திகிராம அறக்கட்டளையில் பணிபுரியும் அனைத்து அலகுகளிலும் உள்ள பணியாளர்களுக்கு தொடர்ந்து பணியாளர்களின் திறமைகளை வெளிக் கொணரும் பொருட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது டாக்டர் தட்சிணாமூர்த்தி அவர்கள் பணியாளர்களுக்கு (Creative Thinking, Organizing skill, Decision making, Communication skill, Stress management, Leadership quality, Transitition management, Organization growth போன்ற பயிற்சிகளை சிறப்பாக அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வியாழக்கிழமையும் மலை 3.30 மணியளவில் தொடர் கவனிப்பும் நடைபெற்று வருகின்றது.



## சமூக ஆய்வு

காந்திகிராம அறக்கட்ளையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை சமூக ஆய்வு செய்ய மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது நமது செயல்பாடுகள் எந்த அளவிற்கு கிராமங்களுக்குச் சென்றடைந்துள்ளன, மக்களிடையே என்ன மாதிரியான சமூக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைக் கண்டறியும் பொருட்டு இம்மூன்று குழுக்களம் தேர்வு செய்யப்பட்டுள்ளன.



அவை 1. முழுமையான நீர்வடிப்பகுதி

2. பாரம்பரிய தொழில் புனரமைத்தல்

3. N. பஞ்சம்பட்டி கூட்டமைப்பு

மேலே குறிப்பிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள கிராமங்களைப் பணியாளர்கள் சமூக ஆய்வு செய்தனர். முதற்கட்ட ஆய்வாக நீர்வடிப்பகுதியில் கட்டமைப்புகள், (தனி நபர்) விவசாயிகள், மற்றும் சுயஉதவிக்குழுக்கள் காந்திகிராம அறக்கட்டளையின் வழிகாட்டுதலில் நன்கு நடைபெற்று வருகின்றன. இதேபோல் ஸ்பூர்த்தி திட்டப் பயன்பாடு, பஞ்சம்பட்டி கூட்டமைப்பு ஆகியவை ஆய்வு செயப்பட்டு இவைகள் நிலைத்துவத்தை அடைய வேண்டிய வழி வழிமுறைகளை இரண்டாவது கட்டப்பணியாக மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

## விற்பனைப் பிரதிநிதி பயிற்சி

லெட்சுமி சேவா சங்கம் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுயஉதவிப் பெண்களுக்கு காந்திகிராம உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளித்து வருகின்றது. குறிப்பாக இந்திய பாரம்பரிய சித்தா ஆயுர்வேத மருந்துகளை விற்பனை செய்வது குறித்த 3 நாள் பயிற்சி ஸ்பூர்த்தி திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு மகளிர் நலமேம்பாட்டுத் திட்ட சுயஉதவிக்குழுக்கும் மற்றும் புதுவாழ்வுத் திட்டக் குழுக்களுக்கும் அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் காந்திகிராம உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதால்



அவர்களுக்கு வருமானம் கிடைப்பதுடன் அவர்களது வாழ்வாதாரங்களுக்கு உதவியாகவும் உள்ளது. 17 மாவட்டங்களிலிருந்து 52 பயனாளிகள் இப்பயிற்சியில் கலந்துகொண்டனர்.

## கிராம இளைஞர்கள் சமூகப்பணியில் ஈடுபடுவதற்கான பயிற்சி

இந்திய மனிதவள மேம்பாட்டு துறையின் கீழ் கிராமங்களில் காந்தியக் கொள்கைகளான அடிப்படைக் கல்வி, கிராமக் கைத்தொழில் ஆகியவற்றை முன்னேற்றும் பொருட்டு கிராமத் தன்னார்வத் தொண்டர்களை உருவாக்க நிதியுதவி செய்து வருகின்றது.

தன்னார்வத் தொண்டர்களை உருவாக்கி அவர்கள் கிராம மக்களின் தேவைகளை அறிந்து உதவுதல், கிராமக் கைத் தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல், இடம்பெயர்ந்து செல்லுதலைத் தவிர்த்தல் போன்ற பணிகளைச் செய்யும் பொருட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மார்ச் 12 முதல் 18 வரை காந்திகிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் 22 இளைஞர்கள் கலந்துகொண்டனர்.



திறமைமிக்க பயிற்சியாளர்களைக் கொண்டு இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. டாக்டர் தட்சிணாமூர்த்தி அவர்கள் தொண்டர்களின் பொறுப்புகள், கிராம வளர்ச்சியில் அவர்களது ஈடுபாடு பற்றி எடுத்துரைத்தார். மேலும், இளைஞர்கள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழவேண்டும் என்று வலியுறுத்தினார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் காந்திய சிந்தனை மற்றும் அமைதியியல் துறை முனைவர் S. நாராயணசாமி அவர்கள் காந்தியக் கொள்கைகள், அமைதி மற்றும் சிரமதானம் பற்றி விளக்கினார். டாக்டர் K.வாசுகி தற்காலக் கல்வியின் தரம், மதிப்பெண் பெறுவதை

நோக்கித்தான் படிப்பு உள்ளது என்றும் கல்வியின் தன்மை குறைந்து விட்டது என்றும் கூறினார். இப்பயிற்சியில் பல்வேறு கிராம முன்னேற்ற விளக்கங்கள் பயிற்சியாளர்களுக்கு விளக்கப்பட்டன.

## புதிய திட்ட ஒப்பந்தம்

தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்துடன் இணைந்து நிலக்கோட்டை ஒன்றியப் பகுதிகளில் மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து வலுப்படுத்தும் திட்டத்திற்காக காந்திகிராம அறக்கட்டளை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டு இதற்கான பணிகள் 2012 மே மாதம் முதல் தொடங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறன. இப்பணிகளை, கிராம விரிவாக்கப் பிரிவு ஏற்று நடைமுறைப்படுத்த உள்ளது.

## விழிப்புணர்வுக் கூட்டம்

காந்திகிராம அறக்கட்டளையின் கீழ் செயல்படுத்தப்படும் சுய உதவிக்குழுப் பெண்களுக்கான கூட்டம் ஏப்ரல் 21–ஆம் தேதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் 'மேற்படிப்பிற்கான வழிகாட்டுதல்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெற்றது. காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக ஊரகத் தொழில் நிர்வாகத் துறைத் தலைவர் முனைவர் சீரங்கராஜன், திரு. முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டு கல்வி வாய்ப்புகள் பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கினர். காந்திகிராம அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு.எம்.ஆர். ராஜகோபாலன் அவர்கள் பெண்கள் உயர்கல்வி பெறுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

## குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டப் பணி ஆய்வு

காந்திகிராம அறக்கட்டளையின் கீழ் செயல்படுத்தப்படும் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டப் பணிகளை பார்வையிடுவதற்கு பெங்களூரு அர்க்கெயம் நிறுவனத்தின் திட்ட மேலாளர் திரு. மனோகர் அவர்கள் 2012 ஏப்ரல் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பார்வையிட்டார். குறிப்பாக சாமியார்பட்டி கிராமத்தில் மாதிரித் திட்டமான



குடிநீர் பயன்பாடு குறித்த ஆய்வுப் பகுதிகளை பார்வையிட்டார்.

குடிநீர்ப் பயன்பாடு குறித்து பயனாளிகள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடமும் கலந்துரையாடினார். ஊராட்சி மன்றத்தலைவர் திரு. T. ஜெயராமன் அவர்கள் சாமியார்பட்டி கிராமத்தில் உள்ள அனைத்து குடிநீர் இணைப்புகளிலும் தண்ணீர் அளவீட்டுக் கருவி (Water Meter) பொருத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அர்க்கெயம் நிறுவனம் தமிழ்நாட்டில் குடிநீர்ப் பயன்பாட்டிற்கான மாதிரி கிராமத்தை உருவாக்கும் பொருட்டு காந்திகிராம அறக்கட்டளையின் மூலம் சாமியார்பட்டி கிராமத்தில் மீதம் உள்ள 90 வீடுகளில் தண்ணீர் ஆய்வுக் கருவி பொருத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.



பெண்ணை பலமற்றவள் என்று சொல்வது அவர்களை நிந்திப்பதற்குச் சமம். உண்மையில் ஆணைவிட பெண்ணுக்கு மனோபலம் அதிகம்!

*– மகாத்மா காந்தி*

*(For Private Circualtion Only)*

*Editorial Team :* **Smt. N. Ramuthai, Smt. R. Revathi, Smt. Meenakshi**

Gandhigram Trust, Gandhigram - 624 302

**Phone** : 0451 - 2452326 & 2452400 **Fax** : 0451 - 2453347

**e_mail** : ggmtrust@sify.com **www.** gandhigram.org

***Printed at :*** **Dr. Soundram Trust, Gandhigram Press,** Gandhigram - 624 302, Telefax : 0451 - 2453347